4. கவன ஈர்ப்பு

(அ) ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள நிலைகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மு. சின்னக்குழந்தை ஒரு பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால் திரு. எஸ். டி. உகம்சந்த், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ் .டி. உகம்சந்த் ; தலைவர் அவர்களே, ''ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட காந்தி நகர் அரிசன மக்களின் சுடுகாட்டை பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், ஆரணி நகரத்தில் புல எண். 7/1-இல் உள்ள 8.05 ஏக்கர் பரப்புள்ள '' கோட்டை காலி மைதானம் '' என வகைபாடு செய்யப்பட்ட மொத்த இடத்தில், 1957ஆம் ஆண்டு கோட்டாட்சியாளரால் 0.91 ஏக்கர் நிலத்தை ஆதி திராவிட காலனி மக்களுக்கு இடுகாடாக பயன்படுத்துவதற்காக ஆரணி நகராட்சிக்கு அலியனேஷன் செய்யப்பட்டு, அவ்விடம் 1954 முதல் சுடுகாடாகப்பயன்படுத்தப் பட்டு வருகிறது. இந்த ஆதி திராவிடர் காலனி '' காந்தி நகர் '' என அழைக்கப்படுகிறது.

2. ஆரணி நகர நில அளவை 1965-இல் தொடங்கப்பட்டு 1969-இல் முடிக்கப்பட்டு சுத்த ஆவணங்கள் அவ்வாண்டிலேயே ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாவணங்களில் புல எண். 7/1 பரப்பு (8 ஏக்கர் 22835 ச.அ.) காலி மைதானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 0.91 ஏக்கர் நிலம் ஆதி திராவிடர் இடுகாட்டிற்கு நிலப் பராதீனம் செய்யப்பட்ட விவரம் தற்செயலாய் குறிக்கப்படாமல் விடப் பட்டுள்ளது. இக்குறை இன்றைய தேதி வரை சரி செய்யப்பட வில்லை. 1982 ஆம் ஆண்டு மேற்கூறிய காந்தி நகரைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்கள் இடுகாடாகப் பயன்படுத்தி வந்த இடத்தில், 4 ஆதி திராவிடர் உட்பட 11 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி, அந்த இடத்திற்கு '' பெரியார் நகர் '' என

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1990 ஏப்ரல் 9

அழைத்து வசித்து வருகிறார்கள். இந்த 11 நபர்கள் கட்டியிருக்கும் வீடுகளுக்குப் போகவர பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. புல எண். 7/1-இல் ஆதி திராவிட இடுகாட்டிற்குப் பராதீனம் செய்யப்பட்ட நிலம் தற்போது கீழ்க்கண்டவாறு உபயோகத்தில் உள்ளது:-

		(ஏக்கர்.)
1.	ஆதி திராவிடர் இடுகாடு	0.58
2.	பாதை	0.16
3.	வீடுகள் கட்டி பிற நபர்கள் ஆக்கிரமிப்பு	0.17
4.	கோட்டைச் சுவரும் காலியிடமும்	0.19
	மொத்தம் ..	1.10

பாதை மற்றும் வீடுகள் கட்டியுள்ள 0.33 ஏக்கர் பரப்பில் (0.16 பிளஸ் 0.17) இதுவரை இடுகாடாகப் பயன்படுத்தவில்லை என விசாரணையில் தெரிய வருகிறது. இதுவரை இடுகாட்டிற்குப் பராதீனம் செய்யப்பட்ட 0.91 ஏக்கர் பரப்பையோ அல்லது இடுகாடாகத் தற்சமயம் பயன்படும் 0.58 ஏக்கர் பரப்பையோ ஆரணி நகராட்சியால் வேலியிட்டு பாதுகாப்புச் செய்யப்படவில்லை. இந்நிலையில் காந்தி நகர் அரிஜன காலனி மக்கள் 17—11—1989 ஆம் தேதியன்று இடுகாட்டிற்கான நிலத்தைச் சுற்றிலும் வேலி அமைக்க முற்பட்டு கற்களை நட்டனர். இதனால் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்திருக்கும் நபர்களின் வீட்டிற்குப் போக உபயோகித்த பாதையையும் தடை செய்து விட்டார்கள். ஆக்கிரமிப்புதாரர்கள் (பெரியார் நகரவாசிகள்) வட்டாட்சியரிடம் முறையிட்டு பாதையைத் தடை செய்த கற்கள் அப்புறப்படுத்தப்பட்டன. இடுகாட்டில் ஆக்கிரமிப்பு செய்த நபர்களை அப்புறப்படுத்திடவும், இப்பகுதியை இடுகாட்டின் விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தவும் தீர்ப்பு வழங்கவேண்டுமெனக் கேட்டு காந்தி நகர் ஆதி திராவிடர் மக்கள் ஆரணி முன்சீப் கோர்ட்டில் ஓ. எஸ். 17/84 வழக்கு தொடர்ந்து இவ்வழக்கு இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. அப்புறப்படுத்தப்பட்ட கற்களை மீண்டும் காந்தி நகர் ஆதி திராவிட மக்கள் பாதையில் நட்டு பாதையைத் தடை செய்துள்ளனர்.

ஆரணி நகர் காந்தி நகர் ஆதி திராவிட மக்கள் இடுகாட்டில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வசித்து வரும் பகுதியைத் தாக்கி வீடுகளுக்குச் சேதம் விளைவித்ததாக வந்த புகார் மீது வட்டாட்சியர் இரு தரப்பினரையும் அழைத்து 15—3—1990 ஆம் தேதி

யன்று செய்யார் காவல் துறை துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் சமாதானக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட முடிவுகளை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்:-

1. இடுகாடு சம்பந்தமாக ஆரணி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கு முடியும் வரை இரு தரப்பினரும் அமைதிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய எந்தவிதமான மாற்றங்களையும் செய்யக்கூடாதெனவும், மற்றும்

2. இரு தரப்பினரும் நடந்த நிகழ்ச்சிகளை மறந்து சட்டமும், ஒழுங்கும் பாதிக்கப்படாத வகையில் மிகவும் அமைதியாகவும், சச்சரவின்றி நடக்கவும், இப்பகுதியில் பூரண அமைதி நிலவ இரு தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலே கண்ட தீர்மானங்களை இரு தரப்பினரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி வசித்து வரும் பெரியார் நகரவாசிகளுக்கு அவர்களுடைய குடியிருப்புக்களுக்குச் செல்லப் பாதையைத் திறந்துவிட வேண்டுமென்ற கோரிக்கைக்கு அமைதிக் கூட்டத்திற்கு வந்திருந்த காந்தி நகரவாசிகள், மற்ற காந்தி நகர்வாசிகளின் கருத்தை அறிந்து கலந்து பேசி முடிவு கூறுவதாகச் சென்றனர். ஆனால், இதுவரை அவர்கள் தங்களின் இசைவைத் தெரிவிக்கவில்லை.

தற்போது ஆரணி நகரப் புலன் எண் 7/1 இடுகாடு நிலம் சம்பந்தமாக ஆரணி முன்சீப் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு ஒ. எஸ். 17/84-இன் தீர்ப்பு வரப் பெற்ற பின்பு, இத்தீர்ப்பின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து இப்பிரச்சினையை முடிவு செய்யப்படும்,

(ஆ) அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, ' ' 1983-ம் ஆண்டில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கி கிடப்பது குறித்த ' ' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :